ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2269/78 - 2022 මාර්තු මස 04 වැනි සිකුරාදා - 2022.03.04

*2269/78 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்***

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சர், வாசுதேவ நாணாயக்கார ஆகிய நான், குறித்த சபைக்கு, ஹபுகஸ்தலாவ நீர் வழங்கல் திட்டத்தின், ருவன்புர நீர் சுத்திகரிப்பு மத்தியஸ்தானத்தை நிர்மாணிப்பதற்காக காணித்துண்டுகள் தேவைப் பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணித்துண்டுகளின் அசையாச் சொத்தின் உரிமையை சுவீகரித்துக்கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.*

**வாசுதேவ நாணாயக்கார,**
*நீர் வழங்கல் அமைச்சர்,*

தொடர்பு இல.: DVP/02/01/NW/441.
*நீர் வழங்கல் அமைச்சு,*
*இல. 35, "லக்திய மெதுர",*
*புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2022, பெப்புருவரி 25.*

1A - G 36277 — 32 (2022/03)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

*மத்திய மாகாணத்தின், நுவரெலியா மாவட்டத்தில், கொத்மலை பிரதேச செயலாளர் பிரிவில் இலக்கம் 460 சீ, ருவன்புர கிராம அலுவலர் பிரிவில், "கிரீன்வுட் வதுயாய (பெருந்தோட்டம்)" எனும் காணியில் கீழ்க் காணப்படும் எல்லைகளில் அமைந்த சுமார் 01 ஏக்கர் 80 பர்ச்சஸ் அளவிலான காணித்துண்டுகள் இரண்டு.*

*காணித்துண்டு இலக்கம் 01*

*காணியின் எல்லைகள்:*

*வடக்கு: தோட்ட வீதி; கிழக்கு: இந்த காணியின் எஞ்சிய பகுதி; தெற்கு: கொரவக்க ஓய; மேற்கு: கால்வாய்.*

*காணித்துண்டு இலக்கம் 02*

*காணியின் எல்லைகள்:*

*வடக்கு : இந்த காணியின் எஞ்சிய பகுதி; கிழக்கு: இந்த காணியின் எஞ்சிய பகுதி; தெற்கு: தோட்ட வீதி; மேற்கு: இந்த காணியின் எஞ்சிய பகுதி மற்றும் கால்வாய்.*

*காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :*

1. *பணிப்பாளர்,
கஹவத்த பெருந்தோட்ட நிறுவனம்,
இலக்கம் 52,
மாளிகாவத்தை வீதி,
கொழும்பு 10.*

EOG *03- 0769*

---

**_1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்_**

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சர், வாசுதேவ நாணாயக்கார ஆகிய நான், குறித்த சபைக்கு, நாவுல வஹகோட்டை நீர் வழங்கல் திட்டத்தின், அமுக்க கட்டுப்பாட்டுத் தாங்கி இலக்கம் 02 ஐ நிர்மாணிப்பதற்காக காணித்துண்டு ஒன்று தேவைப்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்தின் உரிமையை சுவீகரித்துக்கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.*

**வாசுதேவ நாணாயக்கார,**
*நீர் வழங்கல் அமைச்சர்,*

*தொடர்பு இல.: DVP/02/01/MT/437.
நீர் வழங்கல் அமைச்சு,
இல. 35, "லக்திய மெதுர",
புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2022, பெப்புருவரி 25.*

**அட்டவணை**

*மத்திய மாகாணத்தின், மாத்தளை மாவட்டத்தில், கலேவெல பிரதேச செயலாளர் பிரிவில் இலக்கம் ஈ 428 பீ, மெதபெத்த வடக்கு கிராம அலுவலர் பிரிவில், மெதபெத்த கிராமத்திலமைந்த, பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர் திரு. லியனகே சிரிபால அவர்களினால் அளந்து தயாரிக்கப்பட்ட வரைபட இலக்கம் 3270 இற்கு உரிய வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 01 இன் பகுதியாக குறிப்பிடப்படும் " இஹல பேரகஸ் யாய" எனும் காணியில் கீழ்க் காணப்படும் எல்லைகளில் அமைந்த சுமார் 02 பர்ச்சஸ் அளவிலான காணித்துண்டு.*

*காணியின் எல்லைகள்:*

*வடக்கு: மானின்கமுவே கெதர இந்திரலதாகே காணி மற்றும் வீதி; கிழக்கு: இந்த காணியின் எஞ்சிய பகுதி; தெற்கு: இந்த காணியின் எஞ்சிய பகுதி; மேற்கு: மெதபெத்த இலிருந்து கலேலெல மாத்தளை பிரதான வீதி வரையிலான வீதி.*

*காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :*

1. *திரு பீ. ஜீ. அருன சாந்த,*
*இலக்கம் 145/E,*
*பேரகஸ் யாய வீதி,*
*மெதபெத்த,*
*வாசல கோட்டை.*

EOG *03- 0770*